## சொற்பொழிவுகள் வானொலியில் ஒலிபரப்பான நாட்கள்

| | |
|---|---|
| 1. குறள்நெறிச் சிந்தனைகள் - கூடா ஒழுக்கம் (ஐந்து சொற்பொழிவுகள்) | 14,15,16,17, 18-09-1982 |
| 2. திருக்குறள் சிந்தனைகள் - உலகத்தோடு ஒட்ட ஒழுகல் | 25-08-1996 |
| 3. திருக்குறள் சிந்தனைகள் - நன்றிக்கு வித்தாகும் நல்லொழுக்கம் | 26-08-1996 |
| 4. திருக்குறள் சிந்தனைகள் - ஒழுக்கத்தின் எய்துவர் மேன்மை | 27-08-1996 |
| 5. சிலப்பதிகாரத்தில் காப்பிய உத்திகள் | 25-06-1993 |
| 6. நெஞ்சையள்ளும் சிலப்பதிகாரம் | 06-09-2006 |
| 7. ஆண்டாளும், மீராவும் | 27-11-1999 |
| 8. பெரியாரின் சிந்தனைகள் (இரண்டு சொற்பொழிவுகள்) | 22-12-1991, 23-12-1991 |
| 9. பெரியாரின் சிந்தனைகள் (மூன்று சொற்பொழிவுகள்) | 16,17, 18-09-1994 |
| 10. புத்தரின் சிந்தனைகள் (மூன்று சொற்பொழிவுகள்) | 14,15, 16-05-1995 |
| 11. பசவரின் சிந்தனைகள் | |

# பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| 1. | குறள்நெறிச் சிந்தனைகள் - கூடா ஒழுக்கம் | - 9 |
| 2. | திருக்குறள் சிந்தனைகள் - உலகத்தோடு ஒட்ட ஒழுகல் | - 28 |
| 3. | திருக்குறள் சிந்தனைகள் - நன்றிக்கு வித்தாகும் நல்லொழுக்கம் | - 32 |
| 4. | திருக்குறள் சிந்தனைகள் - ஒழுக்கத்தின் எய்துவர் மேன்மை | - 36 |
| 5. | சில ப்பதிகாரத்தில் காப்பிய உத்திகள் | - 40 |
| 6. | நெஞ்சையள்ளும் சிலப்பதிகாரம் | - 62 |
| 7. | ஆண்டாளும், மீராவும் | - 84 |
| 8. | பெரியாரின் சிந்தனைகள் | - 99 |
| 9. | பெரியாரின் சிந்தனைகள் | - 105 |
| 10. | புத்தரின் சிந்தனைகள் | - 115 |
| 11. | பசவரின் சிந்தனைகள் | - 124 |

# குறள்நெறிச் சிந்தனைகள்

## கூடா வொழுக்கம்

### முதல் பொழிவு

14.09.1982

1. துறவறவியலில் அருளுடைமை, புலால் மறுத்தல், தவம் என்னும் மூன்று அதிகாரங்களுக்கும் அடுத்தாற்போல் நான்காவது அதிகாரமாக விளங்குகின்ற கூடாவொழுக்கம் என்னும் அதிகாரத்தில் முதற்குறளாக அமைந்திருப்பது

"வஞ்ச மனத்தான் படிற்றொழுக்கம் பூதங்கள்
ஐந்தும் அகத்தே நகும்" (திருக்குறள் : 271)

என்பதாகும்.

"ஆர்கலி உலகத்து மக்கட் கெல்லாம்
ஓதலிற் சிறந்தன்று ஒழுக்கம் உடைமை"

என்பதனை மதுரைக் கூடலூர் கிழார் போன்ற தமிழ்நாட்டுச் சான்றோர் பலரும் இடையறாது எடுத்துரைத்து வந்துள்ளனர்.

"**தீதும் நன்றும் பிறர்தர வாரா**" என்பது புறநானூற்றுப் புலவர் பெருமகனாகிய கணியன் பூங்குன்றனாரது பொன்மொழியாகும். மக்கள் நல்லொழுக்கத்தைத் தம் உயிரினும் மேலாகக் கருதிப் பாதுகாக்க வேண்டும் என்பதனைத் திருவள்ளுவர்

"ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப் படும்" (திருக்குறள் : 131)

என்று இல்லறவியலிலும் எடுத்துரைப்பர்.

"எல்லா வுயிரும் இன்புற் றிருப்பதுவே
அல்லாமல் வேறொன் றறியேன் பராபரமே"

கனவு நனவாக என்று தாயுமானவரைப் போன்ற சான்றோர் கண்ட வேண்டுமானால், மக்கள் அனைவரும் தத்தமக்குரிய கடமைகளை முறையாகச் செய்து ஒழுக்கமுடன் வாழ வேண்டும். **ஒழுக்கம் இல்லையேல் மக்கள் வாழ்வில் அமைதியும் இன்பமும் அழிந்துபோகும்.** இல்லறத்திலும் துறவறத்திலும் ஈடுபட்டவர்களுக்கு உரிய ஒழுக்கங்களாக வள்ளுவர் கூறுவனவற்றை இன்றைய நடைமுறை உலக வாழ்வுக்கு ஏற்ற வகையில் தனிவாழ்க்கையிலும் பொது வாழ்க்கையிலும் ஈடுபட்டவர்களுக்கு உரிய ஒழுக்கங்களாகக் கொள்ளலாம்.

**பிறர் நம்மிடம் எப்படி நடந்துகொள்ள வேண்டும் என்று நாம் எதிர்பார்க்கிறோமோ அப்படியே நாமும் மற்றவர்களிடம் நடந்து கொள்வதே ஒழுக்கமாகும் என்று தந்தை பெரியார் அவர்கள் கூறுவார்கள்.** இல்லறத்தில் ஈடுபட்டவர்களுக்கு இந்த ஒழுக்கம் போதும். துறவறத்தில் ஈடுபட்டவர்களுக்கு இதனினும் மேம்பட்ட ஒழுக்கம் வேண்டும். மற்றவர்கள் நமக்குத் தீங்கிழைத்தபோதும் - மற்றவர்கள் நமக்கு மானக்கேடு உண்டாகுமாறு நடந்து கொண்டபோதும் நாம் மற்றவர்களுக்கு நன்மையே செய்யவேண்டும் என்பதுதான் பொதுத்தொண்டில் ஈடுபட்டவர்களுக்குப் பெரியார் கூறிய அறிவுரையாகும். மிகச் சிறந்த துறவியாக வாழ்ந்த நாவுக்கரசர் பெருமான்

**"என்கடன் பணிசெய்து கிடப்பதே"**

என்று சொல்லி மக்களுக்குத் தொண்டுசெய்து வாழ்ந்தவர் ஆவர். இன்றைக்கு ஊருக்கும் நாட்டுக்கும் உலகுக்கும் தொண்டு செய்வதாகச் சொல்லிக்கொண்டு பொதுத்தொண்டில் ஈடுபட்டுள்ளோர் அனைவரும் உண்மையிலேயே நாவுக்கரசர் பெருமானைப் போன்ற துறவிகளாக வாழவேண்டும்.

இல்லறம் என்பது ஒரு சிறிய வட்டம்; துறவறம் என்பது ஒரு பெரியவட்டம். கிணறுகளும் ஊற்றுக்களும் சிலருக்கு மட்டுமே நீர் வழங்குவதுபோல இல்லறம் என்னும் சிறிய வட்டத்தில் வாழ்வோர் தம்முடைய மனைவியும் மக்களும் உற்றார் உறவினர்களும் ஆகிய சிலருக்கு மட்டுமே பயன்படக் கூடியவர் ஆவர்.

ஆடி மாதத்தில் பெருக்கெடுத்து ஓடிவரும் பொன்னியாற்றுப் புதுவெள்ளம் பல நூறாயிரம் மக்களுக்கு நீர் வழங்குவதுபோலத் துறவறம் என்னும் பெரிய வட்டத்தில் வாழ்வோர் உலக மக்கள் அனைவருக்கும் பயன்படக் கூடியவர்கள் ஆவர்.

தாமும் தம்முடைய மனைவி மக்களும் மட்டுமே வாழ்வதற்குப் பாடுபடும் இல்லறத்தார்களைப் பற்றிப் பாடவந்த பாவேந்தர் பாரதிதாசன்

"தன்பெண்டு தன்பிள்ளை சோறுவீடு
சம்பாத்தியம் இவையுண்டு தானுண்டு என்போன்
சின்னதொரு கடுகுபோல் உள்ளங் கொண்டோன்
தெருவார்க்கும் பயனற்ற சிறிய வீணன்"

என்று குறிப்பிடுவார். பாவேந்தர் அவர்களே "யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்னும் மனப் பாங்குடையவர்களாய் உலக மக்கள் அனைவரும் நன்றாக வாழவேண்டும் என்று கருதி உண்மையான பொதுத் தொண்டில் ஈடுபட்டுள்ள சான்றோர்களைப் பற்றிக் கூறும்போது

"தூயவுள்ளம் அன்புள்ளம் பெரிய உள்ளம்
தொல்லுலக மக்களெல்லாம் ஒன்றேயென்னும்
தாயுள்ளம்"

உடையவர்கள் எனக் குறிப்பிடுவார்.

ஒரு மனிதன் தன்னலத்துடன் செயல்பட்டு வெற்றியடையும் போது அவனுக்குக் கிடைக்கின்ற இன்பம் சிறு இன்பம் ஆகும். ஒருவன் தன் மனைவிபால் துய்க்கின்ற இன்பமும் சிற்றின்பம் என்று கூறப்பெறும். அதே நேரத்தில் தனக்குரிய பொருள் ஒன்றைப் பிறர்க்கு ஈவதால் வரும் இன்பம் - ஈத்துவக்கும் இன்பம் பேரின்பம் ஆகும். உலகு வாழ்வதற்காகத் தமக்குரிய எல்லாவற்றையும் ஈகம் செய்வதால் வரும் இன்பம் நிலையான மிகப்பேரின்பமாகும். ஆகவே, பொதுத்தொண்டு செய்வதற்காகத் தனக்குரிய மனைவி மக்களைத் துறந்து துறவியான ஒருவன் பிறர்க்குரிய மகளிர்பால் இன்பம் துய்க்கக் கருதுவது அறிவற்ற கொடிய பாவச் செயலாகும். வஞ்சகம் நிரம்பிய நெஞ்சினராகிய

போலித் துறவிகள் உலகத்தார்க்குத் தெரியாமல் காம இன்பம் துய்க்கும் ஒழுக்கக் கேடான செயலைக்கண்டு அவர்களுடைய உடம்பாக அமைந்துள்ள ஐம்பெரும் பூதங்களும் வேதனையால் தமக்குள்ளே சிரிக்குமாம்.

தம்மிடத்தே பூத்த மலர்களைத் தொடுத்து மாலையாக்கி மங்கையர் சூடிக்கொள்ளும்போது அதனைப் பார்த்துச் சோலைகள் சிரிக்குமாம். மக்கள் தம்முடைய மலர்களைப் பறித்து மலக்குழியை மூடுவதற்குப் பயன்படுத்தினால் அதனைக் கண்டு சோலைகள் கோவென்று கதறிக் கதறி அழுமாம்.

"மலம் மூடத்தான் மலர்பறித்தேன் எனில்
குளிர்மலர்ச் சோலை கோவென் றழாதோ"

என்று பாவேந்தர் பாரதிதாசன் பாடுவார். அதுபோல் நிலம், நீர், தீ, வளி, விசும்பு ஆகிய ஐம்பெரும்பூதங்களும் தம்மால் உருவான உடம்பில் உள்ள மெய், வாய், கண், மூக்கு, செவி என்னும் ஐம்பொறிகளாலும் உலகத்தார்க்குத் தெரியாமல், போலித்துறவி தீச்செயல் செய்வதைப் பார்க்கும்போது

"இவன் தீச்செயல் செய்வதற்கு
நாம் உடம்பாய் அமைந்தோமே"

என்று எண்ணி வருந்தி அவனுக்கு உடம்பாய் அமைந்த ஐந்து பூதங்களும் அவனுக்குத் தெரியாமல் அகத்தே நகுமாம். ஆகவே, பிறர்க்குத் தெரியாமல் சாமர்த்தியமாகச் செய்வதாகக் கருதிக் கூடாவொழுக்கத்தை மேற்கொள்ள வேண்டா என்று போலித் துறவிகளுக்குத் திருவள்ளுவர் அறிவுறுத்துகின்றார்.

# திருக்குறள் சிந்தனைகள்

## கூடா ஒழுக்கம்

இரண்டாம் பொழிவு

*15.09.1982*

கூடாவொழுக்கம் என்னும் அதிகாரத்தில் இரண்டாவது குறளாக அமைந்திருப்பது

"வானுயர் தோற்றம் எவன்செய்யும் தன்னெஞ்சம்
தானறி குற்றம் படின்" (திருக்குறள் : 272)

என்னும் பாடலாகும். இது நெருப்பு - இதைத் தொட்டால் சுடும் என்று நன்றாகத் தெரிந்தவர்கள் தொட்டாலும் நெருப்புச் சுடும்; தம்முடைய அறியாமையால் இது பவழம் என்று தவறாகக் கருதித் தொட்டாலும் சுடும். அதுபோல் தெரிந்து செய்தாலும் தெரியாமற் செய்தாலும் தவறு செய்தவர்கள் தாம் செய்த தவற்றுக்கு ஏற்ற தண்டனையை அடைந்தே தீர வேண்டும். ஆனாலும், தெரிந்து செய்கிற தவற்றுக்கும், தெரியாமற் செய்கிற தவற்றுக்கும் தரப்படுகின்ற தண்டனையில் வேறுபாடுண்டு. முன்கூட்டியே திட்டமிட்டுச் சதி செய்து ஒரு கொலையைச் செய்தால் அதற்குத் தூக்குத் தண்டனையும், எதிர்பாராத நெருக்கடிகளுக்கு ஆளாகித் திடீரென்று உணர்ச்சி வசப்பட்டுக் கொலை செய்தால் அதற்கு ஆயுள் தண்டனையும் வழங்கப் படுவதை நாம் பார்க்கிறோம்.

ஆகவே, இது தவறுதான் என்பதைத் தெளிவாகப் படித்தறிந்து உணர்ந்திருந்தும் - அதனைப் பலமுறையும் தெளிவாகப் பலர்க்கும் எடுத்துரைத்திருந்தும் தான் புலனடக்கமின்றித் தவறு செய்வோனை

"ஓதி யுணர்ந்தும் பிறர்க்குரைத்தும் தானடங்காப்
பேதையின் பேதையா ரில்" (திருக்குறள் : 134)

என்று பிறிதோரிடத்திலும் வள்ளுவர் கண்டித்துக் கூறுவார்.

இல்லறத்தில் ஈடுபட்டவர் தவறு செய்தால் அவரது குடும்பம் மட்டுமே கேடு அடையும். உலகத்துக்குத் தொண்டு செய்யும் துறவிகள் தவறு செய்தால் உலகத்துக்கே கேடுண்டாகும். இல்லறத்தான் தவறு செய்வது தரையில் நிற்பவன் கீழே விழுவது போன்றதாகும்; குணமென்னும் குன்றேறி நிற்பவனாகிய துறவி தவறு செய்வது மலைமீது நிற்பவன் கீழே விழுவது போன்றதாகும். எனவே, இல்லறத்தான் தவறு செய்தாலும் - துறவிகளும் பொதுத் தொண்டில் ஈடுபட்டவர்களும் தவறு செய்யவே கூடாது.

அருட்செல்வர்களாகிய உண்மைத் துறவிகளின் தவ வாழ்க்கைக்கு அடையாளச் சின்னம் ஆகிய தவவேடத்தைப் போலித்துறவிகள் பலர் அணிந்து கொண்டு பிறவுயிர்களுக்குத் தீங்குகளைச் செய்கின்றார்கள்.

அணிந்துகொள்ளும் ஆடை அணிகலன்களுக்கும் பொறுப் பேற்றுள்ள பதவிக்கும் என்று சில தனிச்சிறப்புக்கள் உண்டு. உடல் வலி குன்றிய ஒருவன் கூடப் படைமறவர்களுக்குரிய ஆடைகளை அணியும் போது ஒரு புதிய தோற்றத்தையும் ஆற்றலையும் பெறுகிறான். கையிலே காசுபணம் இல்லாதபோது சோர்ந்து நடக்கின்ற ஒருவனே கையில் கொஞ்சம் காசுபணம் வந்து விட்டால் அதற்கென்றுமிடுக்கான தனிநடை நடப்பதைப் பார்க்கிறோம்.

ஆகவே, பலராலும் மதிக்கப்படும் தவவேடந் தாங்கிய துறவிகள் தம்முடைய வேடத்தை நினைந்தாவது ஒழுங்காக நடந்து கொள்ள வேண்டும். அவ்வாறு நடந்து கொள்ளாவிட்டால் உயர்ந்த தவவேடத்தால் ஒரு பயனுமில்லை.

ஆயிரம் ஆயிரம் சதுர மைல்களுக்கு நீர் நிரம்பி இருந்தாலும் கடல் நீரை யாரும் குடிக்கமாட்டார்கள்.

“தெண்ணீர்ப் பரப்பின் இமிழ்திரைப் பெருங்கடல்
உண்ணார் ஆகுப நீர்வேட் டோரே” (புறம் : 203:7-8)

என்பது புறநானூறு.

துறவியர்க்குரிய தவவேடம் வானைப் போலவும் கடலைப் போலவும் மதிக்கத்தக்கதுதான். ஆயினும், துறவிகள் நெஞ்சில் தன்னலமும் காமமும் புகுமானால் அவர்களால் உலகத்துக்குப் பெருங்கேடு உண்டாகும். குளத்து நீரையும் ஆற்று நீரையும் பாய்ச்சும்போது செழிப்பாக வளர்கின்ற நெற்பயிர் கடல்நீரைப் பாய்ச்சும்போது கெட்டுப் போவதுபோலப் போலித் துறவிகளைச் சென்று வணங்கியோர் வாழ்க்கை பாழாகிவிடும்.

"உள்ளத்தில் உண்மையொளி உண்டாயின்
வாக்கினிலே ஒளியுண்டாகும்"

என்பது பாரதி வாக்கு.

"அடுத்தது காட்டும் பளிங்குபோல் நெஞ்சம்
கடுத்தது காட்டும் முகம்" (திருக்குறள் : 706)

என்பதற்கு ஏற்பத் தூய எண்ணங்கள் யாருடைய நெஞ்சில் நிறைந்துள்ளனவோ அவர்களுடைய முகத்தில் ஒரு புதுப்பொலிவு தோன்றும்.

"பேசாப் பொருளைப் பேசநான் துணிந்தேன்
கேட்கா வரத்தைக் கேட்கநான் துணிந்தேன்
மண்மீ துள்ள மக்கள் பறவைகள்
விலங்குகள் பூச்சிகள் புல்பூண்டு மரங்கள்
யாவுமென் வினையால் இடும்பை தீர்ந்தே
இன்பமுற்று அன்புடன் இணங்கி வாழ்ந்திடவே
செய்தல் வேண்டும் தேவ தேவா"

(பாரதியார் கவிதைகள் - விநாயகர் நான்மணிமாலை - 31)

என்று பாரதியார் இறைவனிடம் வேண்டுகிறார். பாரதிக்கு இருந்த தூய நெஞ்சம் துறவிகளுக்கு இருக்குமானால் - அழகினுக்கு அழகு செய்வது போலவும் - பொன்னாற் செய்தபூ நறுமணம் பெற்றது போலவும் - இயல்பாகவே பலராலும் மதிக்கப்படும் தவவேடத்துடன் தூய எண்ணங்களால் முகத்தில் தோன்றும் புதுப்பொலிவும் ஒன்று சேர்ந்து தூய துறவியர்பால் மக்களுக்கு மிகுந்த ஈடுபாட்டைத் தோற்றுவிக்கும்.

இது குற்றம் எனத் தன் நெஞ்சம் தெளிவாக உணர்ந்தவொரு தீச்செயலைச் செய்யும் போலித் துறவியின்

முகத்தின் அருள் விளக்கம் தோன்றாது; மருளும் வஞ்சமும் மயங்கிக் கிடக்கும். தன்னல வேட்கையும் காமமும் ஆகிய பசி நிறைந்த கண்களோடு விளங்கும் போலித்துறவியின் முகத்துக்கும், அவன் கொண்ட தவவேடத்துக்கும் பொருத்தம் இல்லாமற் போய்விடும்.

வான்போல் உயர்ந்த தவவேட மிருந்தும் மக்களால் மதிக்கப்படாத நிலை போலித் துறவியர்க்கு உண்டாகும். எனவே, [தாம் புனைந்துள்ள தவவேடத்தை நினைந்தாவது துறவியர் தமக்குரிய ஒழுக்கத்துடன் நடந்து கொள்ள வேண்டும் என்று திருவள்ளுவர் வலியுறுத்திக் கூறுகின்றார்.]

# திருக்குறள் சிந்தனைகள்

## கூடா ஒழுக்கம்

மூன்றாம் பொழிவு

*16.09.1982*

மக்கள் புறப்பகையை வெல்வது எளிது; காமம், வெகுளி முதலிய அகப்பகையை வெல்வது அரிது. தன்னுடைய படை மறவர்களுக்கு ஒழுங்காகப் பயிற்சி கொடுத்துத் தன்னுடைய கட்டளையைத் தப்பாமல் செயற்படுத்துமாறு செய்யவல்ல படைத்தலைவனே பகைவர்களை வெல்ல முடியும். அதுபோல ஒருவன் தன்னுடைய மெய், வாய், கண், மூக்கு, செவியென்னும் ஐம்பொறிகளுக்கும் முறையாகப் பயிற்சி கொடுத்து நல்லனவற்றைச் செய்யவே அவை பயன்படும் வகையில் தம்முடைய அறிவானும் உறுதியானும் அவற்றை அடக்கி ஆள்பவர்களே துறவிகளாகித் தொண்டு செய்ய முடியும். உரன் என்னும் தோட்டியான் ஓர் ஐந்தும் காக்க வல்ல மனவலிமை உடைய துறவிகளது தோற்றமே இக்குறளில் வல்லுருவம் என்று குறிக்கப் பெறுகிறது.

ஐம்பொறிகளையும் அடக்கும் வலிமையில்லாத ஒருவன் மனவலிமை உடைய துறவிகளுக்குரிய வேடம் புனைந்து தன்னை நம்பிய மக்களுடைய நல்வாழ்வைக் கெடுக்கின்ற செயல் பசு ஒன்று புலித்தோல் போர்த்துப் பயிர்களை மேய்ந்து பாழ் படுத்துகின்ற செயலை ஒக்கும். பசு பசும்புல்லைத் தின்னும் இயல்புடையது. அத்தகைய பசு தனக்குரிய பசும்புல்லைத் தின்னாது மனிதர்களுக்குரிய உணவுப் பொருளைத் தரும் பயிர்களைத் தின்னும் ஆசை கொள்வது தகாத செயலாகும். தன்னுடைய தகாத செயலை நிறைவேற்றிக் கொள்வதற்காகப் பசு

புலித்தோலைப் போர்த்துக் கொண்டு தோட்டத்தினுள் புகுந்து பயிர்களை மேயும்போது அதனைக் காணும் உழவன், புலி பயிரைத் தின்னாது என்னும் நம்பிக்கை காரணமாகவும், அருகில் சென்றால் புலி தன்னைக் கொன்றுவிடலாம் என்னும் அச்சம் காரணமாகவும் அப்புலித்தோல் போர்த்திய பசுவைத் தோட்டத்தை விட்டுத் துரத்தாமல் விட்டுவிடுகின்றான். அதுகார்ணமாக மக்களுக்குரிய உணவினை நல்கும் பைங்கூழ் எல்லாம் பாழாகி உலகிற்குக் கேடு விளைகிறது.

பசு தன்னை விட்டுவிட்டுப் பயிரைத் தின்ற காரணத்தால் புல் பயனின்றி வளர்ந்து பாம்புகளும் பூச்சிகளும் மறைந்து வாழ்வதற்குரிய இடமாக மாறி விடுகிறது. அதனால் பசும்புல்லும், உணவை விளைவிக்கும் பைங்கூழும் ஆகிய இரண்டும் பாழாகின்றன. மக்களும் உணவின்றி மடிகின்றனர். பைங்கூழை மேயும் பசுவும் தோட்டக்காரன் உண்மையைக் கண்டு பிடித்து விடுவானோ என்னும் அச்சம் காரணமாக வயிறார இரையுண்ண முடியாமல் அரைகுறையாக இரையுண்டு அல்லல் படுகின்றது.

அதனைப் போலவே இல்லறத்திலிருந்து இன்பம் துய்த்துத் தன் மனைவிக்கும், மக்களுக்குமுரிய கடமைகளை முறையே செய்து வரும் இல்லறத்தான் ஒருவன் தன்னால் பாதுகாக்கப் பெறவேண்டிய மனைவி மக்களைத் தவிக்குமாறு விட்டு விட்டுப் பற்றெல்லாம் துறந்த தவமுனிவர்போல் வேடம் புனைந்து பிறர்க்குரிய மகளிரை விரும்பிக் கேடுசெய்வது மன்னிக்க முடியாத மாபெருங்குற்றமாகும். அதனால் தானும் முழுமையாக இன்பம் துய்க்க முடியாமல் இடர்ப்படுவதோடு தன்னை நம்பிய பிறரையும் துன்புறச் செய்கின்றான். இது மிகவும் அடாத செயலாகும்.

எனவே, ஒவ்வொருவரும் தம்முடைய அறிவுக்கும், ஆற்றலுக்கும் ஒத்துவராத செயல்களைச் செய்ய முற்பட்டுத் தாமும் துன்புற்றுப் பிறரையும் துன்புறுத்துவது வேண்டாத செயலாகும் என்னும் கருத்தே

"வலியில் நிலைமையான் வல்லுருவம் பெற்றம்
புலியின்தோல் போர்த்துமேய்ந் தற்று" (திருக்குறள் : 273)

என்னும் குறளால் உணர்த்தப்படுகின்றது.

மேலும் இக்குறளில் மனவலிமை என்று குறிக்கப் பெறுவது ஐம்பொறிகளையும் அடக்கி ஆள்வதை மட்டுமன்று. தன்னலத்தைத் துறந்து பொதுத்தொண்டு செய்வதற்காக வந்தவர்கள் மற்றவர் கூறும் பழிச்சொல்லைப் பொறுத்துக் கொள்ள வேண்டும். பொல்லாத பழிகளைத் தம்மேல் சுமத்துகிறார்களே, அதனால் தம்முடைய மானம் போய்விட்டதே, தம்முடைய புகழ் குறைந்துவிட்டதே என்று மனவருத்தம் அடையக் கூடாது. பொதுத்தொண்டு செய்ய வந்தபின் சொந்த மான அவமானங்களை நினைத்து யாரேனும் கவலைப் படுவார்களானால் அவர்கள் உண்மையில் பொதுத்தொண்டு செய்ய வந்தவர்கள் அல்லர். பொதுத்தொண்டைத் தன்னலத்திற்குப் பயன்படுத்திக் கொள்ள முயல்கின்றவரே ஆவர். எனவே, தாமும் தம்முடைய மனைவி மக்களும் உற்றார் உறவினர்களுமாகிய சிலரை மட்டும் வாழவைக்கப் பாடுபடும் இல்லறத்தைத் துறந்து, பல நூறாயிரம் மக்களை வாழ வைக்கின்ற பொதுத்தொண்டில் ஈடுபட்டுப் பலராலும் மதிக்கப்படும் உயர்ந்த பதவிகளில் வீற்றிருப்போர் தாம் இன்புற நினைப்பதை முற்றிலும் மறந்து - சொந்த விருப்பு வெறுப்புக்களுக்குச் சிறிதும் இடங்கொடுக்காமல் - பிறர் கூறும் பழிச்சொல்லைக் கேட்டு வெகுளி கொள்ளாமல் - மனவுறுதியோடு இருந்து தம்முடைய பதவிக்குப் பெரியதொரு மதிப்பை ஏற்படுத்தித்தர வேண்டும். அப்படியில்லாமல் பெரிய பதவிகளில் இருந்து கொண்டு தகுதியுடையார் பலரும் மனம் புழுங்கி வாடுமாறு விட்டுவிட்டு - முறையற்ற வழிகளில் தகுதியில்லாதவர்களாகிய தம்முடைய உற்றார் உறவினர்களுக்குப் பெரிய பதவிகளைத் தந்து நலஞ்செய்ய முயல்வது இழிவானதாகும். இத்தகைய உயர்ந்த பதவியில் இருப்போர் தவறுகளைச் செய்யமாட்டார்கள் - பொதுநலத்தை மறந்து தன்னலத்தைக் கருதமாட்டார்கள் என்று பொதுமக்கள் நம்புவதைப் பயன்படுத்திக்கொண்டு பெரிய

பதவியிலிருப்போர் தன்னலத்தோடு செயல்படுவது ஆற்றல் குறைந்த பசு, ஆற்றல் மிகுந்த புலித்தோலைப் போர்த்துக் கொண்டு பயிர்களை மேய்ந்து பாழ்படுத்திய கொடுஞ்செயலை ஒக்கும் என்னும் கருத்து

"வலியில் நிலைமையான் வல்லுருவம் பெற்றம்
புலியின்றோல் போர்த்துமேய்ந் தற்று" (திருக்குறள் : 273)

என்னும் இக்குறளால் நன்கு விளக்கம் அடைகின்றது.

## திருக்குறள் சிந்தனைகள்

### கூடா ஒழுக்கம்

நான்காம் பொழிவு

*17.09.1982*

"தவமறைந்து அல்லவை செய்தல் புதல்மறைந்து
வேட்டுவன் புள்சிமிழ்த் தற்று" (திருக்குறள் : 274)

என்னும் திருக்குறள் அன்பு வடிவாக விளங்கும் துறவிகளின் வேடத்தில் மறைந்துகொண்டு, தம்மை மிகஉயர்வாக மதித்துப் போற்றித் தம்மைப் புகலிடமாகக் கொண்டு சார்ந்த மக்களுக்குப் பொல்லாங்கு செய்யும் போலித் துறவிகளின் வஞ்சகச் செயலை ஓர் அருமையான உவமை வாயிலாக விளக்கிக் காட்டுகிறது.

இரைதேடச் சென்ற பறவைகள் பொழுதுபோன வேளையில் தமக்குப் புகலிடமாகிய முட்புதர்களிலே சென்று தங்கியிருக்கும் இயல்புடையவை. பறவைகளைப் பிடிக்க வேண்டும் என்னும் கொடிய எண்ணமுடைய வேட்டுவன்-தான் எல்லார்க்கும் தெரியுமாறு வெளிப்படையாக நின்று வேட்டையாட முயன்றால் தனது நோக்கம் நிறைவேறாது என்று கருதிப் பறவைகள் புகலிடமாக வந்தடையும் முட்புதர்களிலே பதுங்கியிருந்து வலைவிரித்து அப்பறவைகளைப் பிடிப்பதுண்டு. அதுபோலப் போலித்துறவிகள் தவவேடத்தில் மறைந்து கொண்டு தம்மை நம்பிவரும் மக்களுக்குப் பெருந்தீங்கு செய்கின்றார்கள்.

மதுரை மாநகரத்தில் கவுந்தியடிகள் கோவலன், கண்ணகி ஆகிய இருவரையும் மாதரி என்னும் இடைக்குல மடந்தையிடம் அடைக்கலப் பொருளாக ஒப்படைத்தார். மாதரியும் கவுந்தியடிகள் சொன்னது போலவே தாய் போலிருந்து

அன்புடன் விருந்தோம்பினாள். கண்ணகியையும், கோவலனையும் அன்புடன் விருந்தோம்பினாள். ஆயினும், பாண்டிய மன்னனால் கோவலன் கொல்லப் பட்டான் என்பது தெரிந்தவுடனேயே, ஆயர்முதுமகளாகிய **மாதரி தன்னிடம் அடைக்கலமாக ஒப்படைக்கப்பட்ட பொருளைப் பாதுகாக்க முடியாமல் போயிற்றே என்று மனம் நொந்து நள்ளிருள் யாமத்தில் தீ வளர்த்து அத்தீயில் பாய்ந்து இறந்து போனாள்** என்பதைச் சிலப்பதிகாரம் நமக்குத் தெரிவிக்கிறது.

[தன்னிடம் அடைக்கலமாக ஒப்படைக்கப்பட்ட பொருள்களைப் பாதுகாக்க முடியாத அவலநிலை வந்துற்றபோது இல்லறத்தாளாகிய மாதரியும் தன்னுடைய உயிர் நீத்துப் புகழ்கொண்ட பண்பாடு மிக்க தமிழ்நாட்டில் தம்மை மிக உயர்வாக மதித்துத் தம்மிடம் அடைக்கலமாக வந்து சேர்ந்த மனிதர்களை வஞ்சனையால் ஏமாற்றிக் கெடுக்கும் போலித் துறவிகளின் கூடாவொழுக்கம் மன்னிக்க முடியாத மாபெரும் குற்றமாகும்.]

[பெற்ற தாய் தன்னுடைய குழந்தையைத் தானே கொல்வது எவ்வளவு கொடிய குற்றமோ - கோயிலில் பூசை செய்யும் அருச்சகரே கோயில் சிலையைத் திருடிவிற்பது எவ்வளவு கொடிய குற்றமோ - அவ்வளவு கொடிய குற்றம் போலித் துறவிகள் தம்மிடம் அடைக்கலமாக வந்து சேர்ந்தவர்களுக்குத் தீங்கிழைப்பதாகும்.]

எந்த நாட்டில் பிறருடைய நல்வாழ்வுக்காகத் தங்களையே தியாகம் செய்யும் தியாகிகள் ஏராளமாக வாழ்கிறார்களோ அந்த நாடுதான் நல்ல நாடாக விளங்க முடியும்.

"நாடா கொன்றோ காடா கொன்றோ
அவலா கொன்றோ மிசையா கொன்றோ
எவ்வழி நல்லவர் ஆடவர்
அவ்வழி நல்லை வாழிய நிலனே" (புறநானூறு : 187)

என்னும் ஔவையார் பாடிய புறநானூற்றுப் பாடலும் ஏறத்தாழ இதே கருத்தை எதிரொலிப்பதாகும். உலகத்தில் உள்ள மக்கள்

அனைவரும் தவறு செய்தாலும் நான் தவறு செய்யமாட்டேன் என்று உறுதி கொண்ட, நெஞ்சுடைய சான்றோர்கள் எண்ணிக்கை ஒரு நாட்டில் நாடோறும் வளர வேண்டும்.

கல்வி அறிவாலும், தவத்தாலும், ஒழுக்கத்தாலும் மேம்பட்டு விளங்கும் உண்மைத் துறவிகள் மிகப் பெரிய தியாகிகள் ஆவர். அத்தகைய துறவிகளை வழிகாட்டிகளாகக் கொண்ட நாட்டில்தான் நல்ல ஆடவர்களும், சான்றாண்மையாகிய கடலுக்குக் கரைபோன்றவர்களாகிய உயர்ந்த சான்றோர்களும் தோன்ற முடியும். அருள் வாழ்க்கையை மேற்கொண்ட துறவிகளே தம் நிலையிலிருந்து தாழ்ந்து வஞ்சகமான வாழ்க்கை வாழத்தொடங்குவார்களானால் - வெள்ளை உள்ளம் படைத்த அப்பாவி மக்களை ஏமாற்றித் தீங்கிழைப்பார்களேயானால் - அப்புறம் அந்த ஏழை மக்களை யார்தான் காப்பாற்ற முடியும்? புதரிலே மறைந்திருந்து வேட்டுவன் விரித்த வலையில் சிக்கிய பறவைகளைப் போல் அந்த ஏழை மக்கள் அழிந்தொழிய வேண்டியதுதான் என்பதை மிக உருக்கமாக எடுத்துரைக்கும்பாடலே,

> "தவமறைந்து அல்லவை செய்தல் புதல்மறைந்து
> வேட்டுவன் புள்சிமிழ்த் தற்று" (திருக்குறள் : 274)

என்னும் திருக்குறள் ஆகும்.

நம்பிக்கை மோசடி செய்வது என்பது மிகப் பெரிய குற்றங்களில் ஒன்றாகும். பொதுத்தொண்டு செய்ய வந்தவர்களும் பெரிய பதவிகளில் அமர்ந்திருப்போரும், தம்மை நம்பிய மக்களுடைய நம்பிக்கை பழுதாகாமல் நடந்துகொள்ள வேண்டும் என்னும் கருத்து இதனால் வலியுறுத்தப்படுகிறது.

## திருக்குறள் சிந்தனைகள்

## கூடா ஒழுக்கம்

ஐந்தாம் பொழிவு

*18.09.1982*

தம்மைச் சொல்லிக் கொண்டு பற்றற்ற துறவிகள் என்று தம்மைச் சொல்லிக் கொண்டு அதனால் பிறரை நம்புமாறு செய்து ஏமாற்றித் தீங்கிழைக்கும் போலித்துறவிகளின் வஞ்சகமான பொய்யொழுக்கம் அவர்களுக்குத் தொடக்கத்தில் இன்பம் தருவது போலத் தோன்றினாலும் இறுதியில் எத்தகைய குற்றத்தைச் செய்துவிட்டோம் என்று தாமே எண்ணி எண்ணி இரங்கிடும் வகையில் அவர்களுக்குப் பல்வேறு துன்பங்களையும் கொடுத்தே தீரும் என்பதைத் திருவள்ளுவர் வலியுறுத்திக் கூறும் குறட்பாவே

"பற்றற்றேம் என்பார் படிற்றொழுக்கம் எற்றெற்றென்று
ஏதம் பலவும் தரும்" (திருக்குறள் : 275)

என்னும் பாடலாகும்.

### ஏமாற்றக் கூடாது

சிலரைப் பலநாள் ஏமாற்றலாம்; பலரைச் சிலநாள் ஏமாற்றலாம். ஆனால் எல்லாரையும் எல்லாக் காலமும் ஏமாற்ற முடியாது என்பது நாம் அனுபவத்திற் கண்டறிந்த உண்மையாகும். **"வேட்டிக்காரன் புளுகு எட்டுநாளில் தெரியும்"** என்பது பழமொழி. எனவே, உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசுவோராகிய போலித்துறவிகளின் தீயவொழுக்கம் பாதிக்கப்பட்டோர் அனைவருக்கும் விரைவில் தெரிந்துபோகும். அவ்வாறு உண்மை வெளிப்படுங்கால் போலித் துறவியர் எத்தகைய கொடிய மானக் கேட்டிற்கும், துன்பத்திற்கும் ஆளாவர் என்பதை அளவிட்டுச் சொல்ல இயலாது. "**தன்வினை தன்னைச் சுடும்**" என்பதற்கு ஏற்பவும், "**கத்தி எடுத்தவன் கத்தியாலேயே**

**அழிவான்**" என்பதற்கு ஏற்பவும் தாம் செய்த தவறுகளே தமக்குப் பகையாகித் துன்பம் செய்வதை ஒருநாள் இல்லாவிட்டாலும் மறுநாள் போலித் துறவிகள் உறுதியாகத் தெரிந்து கொள்வார்கள். அந்தோ! அந்த நாளில் அவர்களைக் காப்பாற்ற யாரும் முன்வர மாட்டார்கள்.

தட்டிக்கேட்க முடியாத காரணம்::

பெரியவர்கள் பெரியவர்களாக நடந்து கொள்ளாமல் சின்ன மனிதர்களாக நடந்துகொள்ளும் காரணத்தால்தான், சின்ன மனிதர்கள் பெரிய மனிதர்களாக நாட்டில் நடமாடுகின்றார்கள். இன்று உலகில் காணப்படும் பல்வேறு தவறுகளுக்கும், துன்பதுயரங்களுக்கும் இதுதான் காரணம். இந்தப் பதவியில் இருப்பவர் இந்தத் தவற்றைச் செய்துவிட்டார், அதனால் இன்னின்னவாறு தீங்குகள் விளைந்துவிட்டன என்று ஒருவரைப் பற்றி அவருக்கும் மேற்பதவியில் உள்ளவரிடம் ஒருவர் முறையிடுகின்றார் என்று வைத்துக்கொண்டால், நாம் செய்யாத எந்தத் தவற்றை நம் கீழ் வேலை செய்யும் இவர் செய்துவிட்டார் என்று அவருடைய மேலதிகாரி நினைக்கும் நிலையே நாட்டில் வளர்ந்து வருகிறது. தவறுகளை ஏராளமாகச் செய்துவரும் ஒரு மேலதிகாரிக்குத் தன்கீழ் இருப்போர் தவறு செய்வதைத் தட்டிக்கேட்கும் ஆன்மபலம் இல்லாமற் போய்விடுகிறது.

ஆகவேதான் - தன்னலந் துறந்த தியாகிகளாய்ப் பிறர்க்கு எடுத்துக்காட்டாய் வாழ வேண்டிய துறவிகள் தவறு செய்வதால் வழிகாட்டுவோர் இல்லாமல் மக்கள் அனைவரும் தடுமாறுகின்றனர்.

முக்கியமானது ஒழுங்கமே!!

வானத்திலிருந்து உப்பு நீரே மழையாகப் பொழியுமானால் பயிர்கள் எவ்வாறு வாழவும் வளரவும் முடியும்? பெற்ற தாயே தான்பெற்ற குழந்தைக்கு நஞ்சூட்டிக் கொல்வாளானால் அப்புறம் அந்தக் குழந்தையை யார்தான் காப்பாற்ற முடியும்? இமயமலை போன்ற பெரிய பெரிய மலைகளெல்லாம் நொறுங்கித் தூள்தூளாகப் போகுமானால் மணலை ஒன்று சேர்த்துக் கல்தூண்களாக்கி, அவற்றை நிறுத்திக் கட்டிடங்கள் கட்டுவது

எவ்வாறு முடியும்? ஆகவே, ஒழுக்கத்தில் இமயம் போன்றவர்களாகிய துறவிகள் தவறு செய்தால் இந்த உலகைக் காப்பாற்ற ஒருவராலும் முடியாது. எனவே, துறவிகளும் பொதுத்தொண்டில் ஈடுபட்டுள்ளவர்களும் யாராலும் எந்தக் காலத்திலும் குறையே சொல்ல முடியாத தூய ஒழுக்கம் உடையவர்களாய் மக்களுக்குத் தொண்டு செய்ய வேண்டும்.

"செய்கதவம் செய்கதவம் நெஞ்சே! தவஞ்செய்தால்
எய்த விரும்பியதை எய்தலாம் - வையத்தில்
அன்பிற் சிறந்த தவமில்லை; அன்புடையார்
இன்புற்று வாழ்தல் இயல்பு"

(பாரதியார் கவிதைகள் - பக்திப்பாடல்கள்-37)

எனவும்,

"உற்றவர் நாட்டவர் ஊரார் - இவர்க்கு
உண்மைகள் கூறி இனியன செய்தல்
நற்றவம் ஆவது கண்டோம் - இதில்
நல்ல பெருந்தவம் யாதொன்று மில்லை"

(பாரதியார் கவிதைகள்-பலபுதிய பாடல்கள் - 15)

எனவும் பாரதியார் இன்றைய நிலைமைக்கு ஏற்பத் தவம் என்பதற்குப் புது விளக்கம் தருகிறார்.

## அன்பே கடவுள்!

துறவிகள் அன்பு வடிவாய் இருப்பவர்கள்; கைம்மாறு கருதாமல் எல்லார்க்கும் அன்பினை வாரி வாரி வழங்கும் இயல்புடையவர்கள்; **ஆருயிருக் கெல்லாம் நான் அன்பு செயல்வேண்டும்** என்று விரும்பும் உண்மைத் துறவிகள் - **வாடிய பயிரைக் கண்ட போதெல்லாம் வாடினேன் என்று சொல்லி நெஞ்சம் உருகிய வள்ளலாரைப் போன்ற துறவிகள்** - பிறவுயிர்கள் இன்புற்று வாழத் தம் உயிரையும் ஈயும் இயல்புடையவர்கள். ஆனால் தன்னலம் கருதும் போலித்துறவிகளோ எல்லாப் பொருளையும் தாமே அடைய முயற்சி செய்வார்கள்.

"அன்பிலார் எல்லாம் தமக்குரியர்" (திருக்குறள் : 72)

என்று வள்ளுவர் கூறுவது இவர்களை நினைத்துத்தான்.

எனவே, கூடாவொழுக்கத்தால் நேரும் தவறுகளை நன்கறிந்த உண்மைத் துறவியர் உலகம் உய்வதற்குரிய

தொண்டுகளை இடையறாது செய்வர்; **புகழெனின் உயிரும் கொடுப்பர்; பழியெனின் உலகுடன் பெறினும் கொள்ள மாட்டார்கள்.** இவ்வாறு அன்பு வடிவாக விளங்கித் தம்முடைய ஆற்றலைப் பெருக்கி, இனியன பேசி வேண்டுவார்க்கு வேண்டுவன ஈந்து வாழும் இயல்புடைய துறவிகளும் பொதுத்தொண்டில் ஈடுபட்டவர்களும்

"மன்னா வுலகத்து மன்னுதல் குறித்தோர்
தம்புகழ் நிறீஇத் தாம்மாய்ந் தனரே" (புறநானூறு : 165)

என்னும் புறநானூற்றுக்கு இலக்கியமாக விளங்கி இறவாத பெருநிலையை அடைவார்கள். அவ்வழியே எல்லாரும் செல்லத்தக்க நல்வழியாகும் என்று கூறி என் உரையை நிறைவு செய்கின்றேன்.

## திருக்குறள் சிந்தனைகள்
## உலகத்தோடு ஒட்ட ஒழுகல்

25.08.1996

உலகத்தோடு ஒட்ட ஒழுகல் பலகற்றும்
கல்லார் அறிவிலா தார்

[பற்பல துறைகளிலும் பரந்து விரிந்த கல்வி அறிவு உடையவர்களாக இருந்தாலும், உலகத்தோடு ஒட்ட ஒழுகலைக் கல்லாதவர்கள் ஒருசிறிதும் கல்வி அறிவில்லாத பேதைகளாகவே உலகத்து மக்களால் கருதப்பெறுவர் என்பது திண்ணம்.]

[நிலம், நீர், தீ, வளி, விசும்பு ஆகிய ஐம்பெரும் பூதங்களும் ஒன்று கலந்த மயக்கமே உலகம் ஆகும் என்பது தொல்காப்பியம்.] இந்தப் பரந்து விரிந்த உலகத்தில் பலநூறு கோடி மக்கள் சிறப்பில்லாத பொதுமக்களாக வாழ்ந்தாலும், அவர்கள் வாழும் வாழ்க்கை முறையைப் பற்றிக் கவலைப் படாமல், பிறர் வாழத் தாம் வாழும் [சான்றோர்கள் வாழ்க்கை நெறியைப் பார்த்து அவர்களைப் போலவே, தாமும் வாழ வேண்டும் என்று பெரும்பாலான மக்கள் நினைக்க வேண்டும்; நினைத்தவாறே உயர்ந்த வாழ்க்கை வாழ வேண்டும் என்று அறிஞர்கள் கூறுகின்றார்கள்.

"வழக்கெனப் படுவது உயர்ந்தோர் மேற்றே
நிகழ்ச்சி அவர்கட்டு ஆகலான" (தொல்.பொருள்.மரபியல்-94)

என்பது தொல்காப்பியம்.]

[நல்லொழுக்கம் உடைய சான்றோர்களுடைய வாய் பிறர்க்கு நலம் பயக்கும் நல்ல சொற்களை மட்டுமே பேசும். அவர்கள் வாய்தவறிக் கூடப் பிறர்க்குத் தீங்கு பயக்கும் தீய சொற்களைப்பேச மாட்டார்கள்.

"ஒழுக்கம் உடையார்க்கு ஒல்லாவே தீய
வழுக்கியும் வாயாற் சொலல்" (திருக்குறள் : 139)

என்பது வள்ளுவர் தந்த வான்மறையாகும். சான்றோர் வாய் தீய சொற்களைப் பேசாது என்பது போலவே, அவருடைய கண்கள் தீயனவற்றைக் காணா; கைகள் தீயனவற்றைச் செய்ய மாட்டா; செவிகள் தீயனவற்றைக் கேட்க மாட்டா; மூக்குத் தீயனவற்றை முகர்ந்து பார்க்காது. சுருங்கச் சொன்னால் சான்றோர்களுடைய மெய், வாய், கண், காது, மூக்கு எனும் ஐம்பொறிகளும் உலகிற்கு நன்மைகளை மட்டுமே செய்யும். தீயனவற்றைச் செய்யா. அத்தகைய சான்றோர்களுக்கே உலகம் கட்டுப்பட்டு இயங்கும்.

**"சுவைஒளி ஊறுஓசை நாற்றம் என்றைந்தின்**
**வகைதெரிவான் கட்டே உலகு" (திருக்குறள் : 27)**

என்பது நீத்தார் பெருமை கூறும் நீதிக்குறள் ஆகும். ஆண்டாள் தாம் பாடிய திருப்பாவையில் காத்தற் கடவுளாகிய திருமாலை **ஓங்கி உலகளந்த உத்தமன்** என்று புகழ்ந்து ஏத்துவார். அதற்கு உரை எழுதிய நாலாயிர திவ்விய பிரபந்த உரைகாரர் **எவனொருவன் தான் வாழப் பிறரைத் துன்புறுத்துகின்றானோ அவன் அதர்மன்; தானும் வாழ்ந்து பிறரும் வாழவேண்டும் என்று நினைப்பவன் மத்திமன்; பிறர்வாழத் தன்னை அழித்துக் கொள்கிறவன் உத்தமன்;** தன்னை அழித்துக் கொள்வதைவிடத் தன் பெருமையை அழித்துக் கொள்பவன் மகா உத்தமன். திருமால் தன்பெருமையை அழித்துக் கொண்டு, முதிய அந்தணன் வடிவமெடுத்து வந்து, மாவலிச் சக்கரவர்த்தியிடம் மூன்றடி மண் பிச்சை கேட்டுப் பெற்று, **ஓங்கி உலகளந்து நின்று** தேவரையும், மக்களையும் காத்தான். ஆதலின், திருமாலை உத்தமன் என்று பாராட்டினார் என்னும் கருத்துப்பட விளக்கம் கூறுவார்.

இந்தப் பிறப்பில் புண்ணியம் செய்தால் மறுபிறப்பில் தேவராகப் பிறந்து இன்பம் துய்க்கலாம் என்று ஆசைப்பட்டுப் புண்ணியம் செய்பவர் உண்டு. அவர்கள் உயர்ந்தோர் அல்லர்; தருமத்தை விலை கூறி விற்கும் தரும வியாபாரிகள். அவர் செயல் போற்றத்தக்கது அன்று. கைம்மாறு கருதாமல் கொடுப்பதுதான் - தம்முடைய நன்றியறிதலைப் புலப்படுத்த மாட்டாத ஏழை எளியவர்களுக்குக் கொடுப்பதுதான்.

"காணார் கேளார் கால்முடம் பட்டோர்
பேணுநர் இல்லோர் பிணிநடுக் குற்றோர்"
(மணிமேகலை–அறவணர்த் தொழுத காதை : 111, 112)

முதலிய இரவலர்களுக்கு உணவும், உடையும், உறையுளும் நல்குவதுதான் உத்தமமான அறச்செயலாகும்.

புறநானூற்றில் உறையூர் ஏணிச்சேரி முடமோசியார் என்னும் புலவர் பெருமகன் ஆய் அண்டிரன் என்னும் வள்ளலைப் புகழ்ந்து பாடிய பாட்டு ஒன்று உண்டு.

"இம்மைச் செய்தது மறுமைக்கு ஆம்எனும்
அறவிலை வணிகன் ஆய்அலன்; பிறரும்
சான்றோர் சென்ற நெறியென
ஆங்குப் பட்டன்று அவன்கை வண்மையே"
(புறநானூறு : 134: 1–4)

என்னும் அந்தப் பாட்டில் சான்றோர் நடந்து காட்டிய நன்னெறிப்படி வாழ்தலே தாம் வாழும் முறையெனக் கருதி ஆய் அண்டிரன் இரவலர்க்கு ஈந்து வள்ளலாக வாழ்ந்தான் என்று கூறப்பெற்றுள்ளது.

**உலகத்துச் சான்றோர் வாழ்ந்த முறையில் வாழ்வதே உலகத்தோடு ஒட்ட ஒழுகலாகும்.** பழம்பெரும் அறநூல்கள் கூறிய ஒழுக்க முறைகளுள் இக்காலத்திற்குப் பொருத்த மில்லாதவற்றை மேற்கொள்ளாது கைவிடுதலும், அந்நூல்களில் செய்யக்கூடாது என்று விலக்கப்பட்ட சில ஒழுக்கங்களையும், அந்நூல்களில் சுட்டப்படாது விடுபட்ட புதிய வாழ்வியல் முறைமைகளையும் மேற்கொண்டு ஒழுகுதலும் உலகத்தோடு ஒட்ட ஒழுகலாகும். வேதம் ஓதும் அந்தணர்கள் வெளிநாடு செல்லக்கூடாது என்பன போன்ற ஒழுக்க விதிகளைக் கைவிடுதலும், இன்னின்ன சாதியார்க்குக் கல்வி கற்பிக்கக் கூடாது என்னும் வரையறைகளைப் பொருட்படுத்தாது "**எல்லார்க்கும் கல்வி கொடு; எல்லாக் கல்வியும் தமிழில் கொடு**" என்னும் புதிய குறிக்கோள் மொழிகளை வாழ்க்கை முறைகளாக ஏற்றுச் செயல்படுதலும் உலகத்தோடு ஒட்ட ஒழுகலாகும். கல்விக்குப் பயன் அறிவு;

அறிவுக்குப் பயன் ஒழுக்கம்; ஆதலின், கல்வி கற்றும் ஒழுக்கம் இல்லாதவராக வாழ்பவர் கல்லாத மூடராகவே மக்களால் மதிக்கப் பெறுவர். ஆதலின்,

"உலகத்தோடு ஒட்ட ஒழுகல்; பலகற்றும்
கல்லார் அறிவிலா தார்" (திருக்குறள் : 140)

என்பது வள்ளுவப் பெருந்தகையின் மிகச்சிறந்த வாழ்வியற் சிந்தனையாகும்.

## திருக்குறள் சிந்தனைகள்
## நன்றிக்கு வித்தாகும் நல்லொழுக்கம்
*26.08.1996*

உலகப் பேரறிஞர்களுள் ஒப்பற்ற சிறப்புடைய மாமேதையாக விளங்குபவர் வள்ளுவப் பெருந்தகை. அவர் கூறிய,

"நன்றிக்கு வித்தாகும் நல்லொழுக்கம்; தீயொழுக்கம்
என்றும் இடும்பை தரும்" (திருக்குறள் : 138)

என்னும் குறள் உயர்ந்த வாழ்க்கை விளக்கச் சிந்தனைச் சுடராகும். நல்லொழுக்கம் என்பது ஒருவனது நல்லறச் செயல்களுக்குக் காரணமாக அமைந்து, அவனுக்கு இம்மையிலும், மறுமையிலும் இன்பம் பயக்கும்; தீய ஒழுக்கமோ ஒருவனது பாவத்திற்கு அடிப்படைக் காரணமாக அமைந்து அவனுக்கு இம்மையிலும், மறுமையிலும் இடைவிடாது துன்பங்களைக் கொடுக்கும். ஆதலின், தாம் இன்பமாக வாழவேண்டும் என்று விரும்புகின்ற ஒவ்வொருவரும், தம்மைச் சார்ந்த உற்றார் உறவினர்கள் மட்டுமல்லாமல், ஊரிலுள்ள அனைவரும் - தம்மைப் பகைவர்களாகக் கருதிக்கொண்டு இடையூறுசெய்து வாழுகின்ற பரிதாபத்திற்குரிய பகைவர்களும், அந்தப் பகைவர்க்கு உதவி செய்துவரும் நண்பர்களும் ஆகிய அனைவரும் இன்பம் எய்தும்படியான நல்லறச் செயல்களைச் செய்தாக வேண்டும்.

"ஊரார் பிள்ளையை ஊட்டி வளர்த்தால் தன்பிள்ளை
தானே வளரும்"

என்பது நம்நாட்டுப் பழமொழி.

"உற்றவர் நாட்டவர் ஊரார் - இவர்க்கு
உண்மைகள் கூறி இனியன செய்தல்
நற்றவ மாவது கண்டோம் - இதில்
நல்ல பெருந்தவம் யாதொன்று மில்லை"
(பாரதியார் கவிதைகள்-பல புதிய பாடல்கள்-15)

என்று மகாகவி பாரதி கூறிய பாட்டு இந்த உண்மையை நன்கு விளக்கும்.

ஆலமரத்தின் சிறிய விதை ஒன்று முளைத்து, மெல்ல மெல்ல வளர்ந்து பெரிய மரமாகி, **ஆலக்குடி, ஆலங்குடி, திருவாலம்பொழில், திருவாலங்காடு** என்று பல ஊர்கள் உருவாகக் காரணமாக அமைகின்றது. அதுபோன்றே நல்லொழுக்கத்திலிருந்து நல்லறச் செயல்கள் பலவும் கிளைத்துத் தோன்றி நாட்டையும், உலகையும் நன்கு காத்து வளர்க்கின்றன.

நீர்நிரம்பிய **வையை** என்னும் பேராறு பாண்டிய நாட்டில் வளரும் பயிர்களுக்கும், மக்கள் முதலிய உயிர்களுக்கும் தாயாக இருந்து நீர் வழங்கி வாழ்விக்கும் பேரறச் செயலைப் பல்லாயிரம் ஆண்டுகளாகச் செய்துவருகின்றது. இதனை இளங்கோவடிகள்,

"உலகுபுரந் தூட்டும் உயர்பே ரொழுக்கத்துப்,
புலவர் நாவில் பொருந்திய பூங்கொடி
வையை என்ற பொய்யாக் குலக்கொடி"

(சிலம்பு.புறஞ்சேரியிறுத்த காதை : 168-170)

என்று மனம் உருகிப் பாராட்டுவார்.

இங்கே, வையை என்னும் பாண்டியர் குலக்கொடி ஒழுக்கம் உடையவள்; பேரொழுக்கம் உடையவள்; உயர்பேரொழுக்கம் உடையவள் என்று இளங்கோவடிகள் அடைமொழிகள் பல கூறிச் சிறப்பிப்பதைச் சிறிது எண்ணிப் பார்த்தால் நமக்குப் பல உண்மைகள் விளங்கும். பிறரைப் பற்றிக் கவலைப்படாமல், தானும், தன் மனைவியும், மக்களும் நன்றாக வாழ்ந்தால் போதும் என்று எண்ணி வாழ்வதும் ஒழுக்கமான வாழ்வே; ஆனால், நாட்டாரும், ஊராரும் நன்றாக வாழ வேண்டும் என்று எண்ணி வாழ்வது பேரொழுக்கம், உலகத்து உயிர்கள் எல்லாம் உவப்புடன் வாழ ஓயாது தொண்டு செய்வது உயர்பேரொழுக்கம் என்பதுதான் இளங்கோவடிகள் கூறும் விளக்கம் ஆகும். ஆகவே, மணிமேகலை என்னும் காப்பியத்தின் தலைவியாகிய மணிமேகலை அமுதசுரபியைக் கையில் ஏந்திப்

"பாரகம் அடங்கலும் பசிப்பிணி அறுக"

(மணிமேகலை - ஆதிரை பிச்சையிட்ட காதை - 133)

என்னும் உயர்ந்த குறிக்கோளுடன், பசித்து வந்தவர் அனைவருக்கும் பெருஞ்சோறு வழங்கி வாழ்வித்தது போல வாழ்தலே நன்றிக்கு வித்தாகும் நல்லொழுக்கம் உடையார் செயலாகும்.

தம்மிடம் உதவிகேட்டு வந்தவர்களை அலட்சியப் படுத்தியும் அவமானப் படுத்தியும் உதவி செய்வது அறம் ஆகாது. உதவி கேட்டு வந்தவர்களைப் பெருமைப்படுத்தி - அன்போடு பேசி, அவருக்கு வேண்டிய பொருளை அவர் தேவைக்கு மேலும் மிகுதியாகக் கொடுப்பது சான்றோர் செயலாகும். வடலூர் **இராமலிங்க அடிகளாரைப் போன்று,** தான் என்னும் ஆணவத்தை முற்றிலும் வேரறுத்து.

"மலத்திடையே புழுத்தசிறு புழுவினிலும் கடையேன்"

என்னும் அடக்கமும், பணிவும் உடையவர்களாய், **ஈத்துவக்கும் இன்பம் என்னும் பேரின்பத்தை** இவர் எமக்கு அளிக்க வந்தார். என்னும் அன்புணர்ச்சியுடனும் பெருமித உணர்ச்சியுடனும் தம்பால் உதவி கேட்டு வந்தவர்க்கு உதவி செய்தலே நல்லொழுக்கம் உடைய சான்றோர் இயல்பாகும்.

மக்கள் தாம் உயிர் வாழும் காலத்தில் தம் அறிவை விரிவுசெய்து அகண்டம் ஆக்கி, விசாலப் பார்வையால் மக்களை விழுங்கி, வையத்தலைமை கொள்ள வேண்டும்; உயிருடன் வாழும் காலத்தில் பகைவரும் போற்றப் பெருமித உணர்வுடன் வாழவேண்டும்.

"கல்வி தறுகண் இசைமை கொடையெனச்
சொல்லப் பட்ட பெருமிதம் நான்கே"

(தொல்.பொருள்.மெய்ப்பாட்டியல் - 9)

என்பது தொல்காப்பியம். கல்வியாலும், கேள்வியாலும் தம் அறிவைப் பெருக்கிக் கொண்டு,

"என்னருந் தமிழ் நாட்டின்கண் எல்லோரும் கல்விகற்றுப்
பன்னருங் கலைஞானத்தால் பராக்கிரமத்தால் அன்பால்

உன்னத இமயமலைபோல் ஓங்கிடும் கீர்த்தி எய்தி
இன்புற்றார் என்று மற்றோர் இயம்பக் கேட்டிடும்"
(பாரதிதாசன் கவிதைகள்)

பெருமித நிலை எய்த வேண்டும்.

"மெல்ல வந்தென் நல்லடி பொருந்தி
ஈயென இரக்குவர் ஆயின் சீருடை
முரசுகெழு தாயத்து அரசோ தஞ்சம்
இன்னுயி ராயினுங் கொடுக்குவென்" (புறநானூறு: 73: 1-4)

என்று வஞ்சினங்கூறிய **நலங்கிள்ளி** போன்று தறுகண்மையும், புகழும், கொடையும், உடையவராய் வாழும் வாழ்வே போற்றுதற்குரிய பெருமித வாழ்வாகும்.

இவ்வாறு, நாட்டில் நல்லறமும், நல்ல பண்புகளும் செழித்து வளரும் வகையில் பெருமிதத்துடன் வாழும் வாழ்வு நல்லொழுக்கம் உடையவர்க்கே வாய்க்கும் என்பது திண்ணம். **நல்லொழுக்கம் என்பது இன்பங்களின் தாய்; இன்னல்வாராமல் காக்கும் பாதுகாப்புப் பேரரண்.** இதனையே,

"நன்றிக்கு வித்தாகும் நல்லொழுக்கம்; தீயொழுக்கம்
என்றும் இடும்பை தரும்" (திருக்குறள் : 138)

என்னும் வள்ளுவர் வாய்மொழிச் சிந்தனை நமக்கு நயமாக எடுத்துரைக்கின்றது.